DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.193/2018**

Deposition of :PW - 8

| | | |
|---|---|---|
| Name | : திரு.சின்னையன் | Caste: |
| Father's Name | : திரு. முத்துசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றவாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 21st day of March - 2023.

**Accused present.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாவட்டம் மல்லியகரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 25.06.2017 அன்று வாழப்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் பிற்பகல் சுமார் 01.00 மணியளவில் வாழப்பாடி காவல் நிலைய குற்ற எண்.315/2017, இதச 302 பிரிவின்படியான வழக்கில் சம்மந்தப்பட்ட முருகேசன் என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்படி பணிக்கப்பட்டு பாஸ்போர்ட் மற்றும் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் பெற்றேன்.

பிரேதத்தை எடுத்து சென்று சேலம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.அருண்பிரபாகரன் என்பவர் வசம் ஒப்படைத்தேன். அவர் பிரேதத்தை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தார். சவக்கிடங்கில் பணியில் இருந்த மருத்துவர் ஆர்.சங்கீதா என்பவரிடம் வேண்டுகோள் கடிதத்தை ஒப்படைத்தேன். பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவருக்கு அடையாளம் காண்பித்தேன். பிரேத பரிசோதனை

முடிவடைந்த பிறகு உடலை அவரது உறவினர் வசம் ஒப்படைத்தேன். 11.07.2017 அன்று இறந்தவரின் உடல் உள் உறுப்புகளை ரசாயன பரிசோதனைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து பெற்று அன்றைய தினமே சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக 12.07.2017 அன்று ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Sd/- **G. Sri Rama Jeyam)**
III Additional District Judge,
Salem.